RANI-22-JAN-2012




# திரு மண வாழ்வின் திரு மந்திரம்

## சத்குரு ஜக்கி வாசுதேவ்

ஆண்டுக்கு ஆண்டு விவாகரத்து வழக்குகள் பெருகிக்கொண்டே வருகின்றன. நூற்றுக்கணக்கில் அல்ல ஆயிரக்கணக்கில், காதல் மணம் புரிந்த ஜோடிகூட இரண்டாம் ஆண்டிலேயே குடும்ப நல நீதிமன்றத்தில் அடியெடுத்து வைக்கின்றன.

'ஆயிரம் காலத்துப் பயிர்' எனப் போற்றப்படும் மணவாழ்வு, ஆறே மாதத்தில் கசந்து போவது எதனால்...?

மணவாழ்வின் மகத்துவம் குறித்து விளக்குகிறார் சத்குரு ஜக்கி வாசுதேவ்.

"உறவுகளின் ஆதார சுருதியே தேவைகள்தான். விதவிதமான உறவுகளை உருவாக்குவதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாய் இருக்க முயற்சிக்கிறீர்கள். நட்பை உருவாக்கிக்கொள்வது, திருமணம் செய்துகொள்வது, குழந்தைகள் பெற்றுக்கொள்வது, தொழில் தொடங்குவது– இவையெல்லாம் மகிழ்ச்சியாய் இருப்பதற்கான முயற்சிகள்தான்.

பெரும்பாலான மனிதர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் உறவுகளிலேயே மிகவும் நெருக்கமானது ஆண்–பெண் பந்தங்கள்தான். அவர்கள் சேர்ந்திருக்கும் நேரத்தில் சண்டை போட்டுக்கொள்கிறார்கள். பிரித்து வைத்தீர்கள் என்றால் 24 மணி நேரத்துக்கு மேல் அவர்களால் பிரிந்திருக்க முடியாது. மறுபடியும் சேர்த்து வைத்தால், அடுத்த பத்தாவது நிமிடத்துக்குள் சண்டையைத் தொடங்கிவிடுவார்கள்.

அவர்களால் சேர்ந்தும் இருக்க முடியாது, பிரிந்தும் இருக்க முடியாது. இது அவர்களுக்குள் இருக்கும் ஒரு விதத் தேவையின் காரணமாக ஏற்படுகிற மோதல். தங்களுக்குள் மகிழ்ச்சியையோ, ஆனந்தத்தையோ அவர்கள் உணரவில்லை. ஒருவர் இன்னொருவரிடம் இருந்து மகிழ்ச்சியை, ஆனந்தத்தை பிழிந்து எடுக்கப் பார்க்கிறார்.

ஆனால், இது ஒரு போராட்டமாகத்தான் இருக்கும். நெருக்கமான உறவுகளில் இருக்கும் இத்தகைய இரண்டு பேர் ஒருவரை ஒருவர் கொலை செய்துவிடப் போவதில்லை. ஆனால், வெவ்வேறு விதமாக சித்திரவதை செய்துகொள்வார்கள்.

மனிதர்கள் தங்கள் மகிழ்ச்சியைப் பெருக்கிக்கொள்ள திருமணம் செய்துகொள்வார்களேயானால் அது மிகவும் நல்ல விஷயம். மாறாக தங்கள் துயரங்களைப் பெருக்கிக்கொள்ள திருமணம் செய்வது மிகவும் மோசமான சூழ்நிலை.

உறவுகள் என்பவை மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ளும் வழிமுறைகளாக விளங்கும் வரை சிக்கல்கள் இல்லை. பிறரிடம் இருந்து ஏதாவது பிடுங்கிக்கொள்வது என்பதாக இருக்குமானால், எப்போதும் சிக்கல்தான். அந்தச் சூழலை எவ்வளவுதான் திறன்பட நிர்வாகித்தாலும், தொல்லைகள் இருந்துகொண்டேதான் இருக்கும்.

நீங்கள் படித்து இருக்கலாம். தொழிலில் பெரிய நிர்வாகியாக விளங்கலாம். ஆனால், உங்கள் உறவுகளை நிர்வாகிக்க அது உதவுவதில்லை. உறவு என்பது பக்கத்தில் இருக்கும் ஒருவருக்கான ஓர் அர்ப்பணிப்பாக இருக்கும் என்றால் அது மிகவும் அற்புதமாக அமையும்.

உறவுகளை இனிமையானவையாக வைப்பதும், சிக்கல் மிக்கதாக உருவாக்குவதும் உங்களைப் பொறுத்துதான் இருக்கிறது.

பெரும்பாலானவர்களுக்கு உறவுகள் ஆரம்ப நிலையில் மகிழ்ச்சியைத் தருகின்றன. போகப் போக பதற்றத்தை அளிக்கின்றன. உங்கள் எதிரிகள் உங்களைக்கொல்வதில்லை. நீங்கள் மிகுந்த நேசத்துடன் உருவாக்கிய உறவுகள்தான், உங்களை நாள்தோறும் சித்திரவதைகளுக்கு ஆளாக்குகின்றன. காரணம், அந்த உறவுகள் விழிப்புணர்வுடனோ, விருப்பத்துடனோ தேர்வு செய்யப்படவில்லை என்று பொருள்.

எல்லா உறவுகளையுமே மனிதர்கள் பற்றுகளாகத்தான் பார்க்கிறார்கள். குறிப்பாக, பாலியல் சார்ந்த உறவுகளில் இந்தப் பற்று அதிகமாகவே இருக்கிறது. பற்று என்பது அறியாமையின் வெளிப்பாடு. இதற்கு அடிப்படைக் காரணம், உங்கள் உடலோடு உங்களை நீங்கள் ஆழமாக அடையாளப்படுத்தி இருப்பதுதான். எனவே, இரண்டு மனிதர்களின் உடல் சார்ந்து ஓர் உறவு அமைகிறபோது, அந்தப் பற்று இன்னும் ஆழமாகிறது.



உங்கள் வாழ்வில் நீங்கள் இப்போது இருக்கும் நிலைகளுக்கு ஏற்ப உறவுகள் உங்களுக்கு துணை செய்யும். இளமைப் பருவத்தில் உடல் மீது உங்கள் பற்று மிக ஆழமாக இருக்கிறது. வயதாக, வயதாக அந்தப் பற்று உடலில் இருந்து மனதுக்கோ, உணர்வுக்கோ தாவுகிறது.

இளமைப் பருவத்தில் உடல் சார்ந்த சுதந்திரத்தை விரும்பி இருப்பீர்கள். பிறகு, 35 வயதைத் தாண்டும்போது உடல் இன்பத்தைவிட நேசம், அன்பு போன்றவைகளே முக்கியம் என்று கருதுகிறீர்கள்.

இனப் பெருக்கம் என்பது உலகின் நியதி. பூக்கள் மலர்வதைப் பார்த்து ஒருவருக்கு கவிதை எழுதத் தோன்றுகிறது. ஆனால், பூக்கள் மலர்வதே இனப் பெருக்கத்துக்காகத்தான். அவற்றின் நிறங்களும், மணங்களும் அதற்கான தந்திரங்கள்!

இந்த உலகில் நீங்கள் மேற்கொள்ளும் பாலியல் உறவும், இனப் பெருக்கத்தை அடிப்படையாகக்கொண்டதுதான். ஆனால், இனப் பெருக்கத்தில் ஈடுபடும்போது அது ஒருவிதமான குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது. உடல் சார்ந்த அளவில் உங்களையே முழுமையாக இன்னொருவருக்குத் தருகிறீர்கள். துரதிருஷ்டவசமாக பலருக்கும் இதுதான் மிக உயர்ந்த பகிர்தலாக இருக்கிறது.

வேறு எவரோடும் பகிர்ந்துகொள்ள முடியாததை குறிப்பிட்ட இந்த மனிதரோடு பகிர்ந்துகொள்வதால் பரஸ்பரம் ஒரு நெருக்கம், ஒரு வலை இருவரிடையே பின்னப்படுகிறது. இதுவும் ஒரு வகையான தந்திரம்தான்!

உறவுகளை இன்னதென்று வரையறுக்கும் அவசியம்கூட இல்லை. இரண்டு பேரிடையில் உண்மையான அன்பு இருக்கின்றதென்றால், அது கணவன்– மனைவி உறவாகட்டும், பெற்றோர்–குழந்தை உறவாகட்டும். நண்பர்கள் இடையேயான உறவாகட்டும்... அவற்றை வரையறை செய்ய வேண்டிய தேவை இல்லை. அன்பு தொலைந்து போகிற இடங்களில்தான் வரைமுறைகளும், விளக்கங்களும் வேண்டியது இருக்கின்றன.

உண்மையான அன்பு நிலவுமானால் இருவரிடையே வரையறைகளுக்கும், விளக்கங்களுக்கும் வேலை இல்லை. பரஸ்பரம் அன்பு நிலவாத இடங்களில், விளக்கங்கள் மட்டும் அவர்களை ஒன்றாக வைத்து இருக்கின்றன. இது ஒரு வசதி கருதி மட்டுமே!

அதற்காக தாம்பத்திய வாழ்க்கையே இப்படித்தான் என்றில்லை. ஆனால் பலருக்கும் இந்த நிலைதான். பலரும் தங்கள் வாழ்க்கை இணையை 'என் உயிர்த் துணை' என்கிறார்கள். இது அவ்வளவு எளிதில்லை. அத்தகைய உறவுகள் வெறும் உடல், உணர்வுத் துணையாக மட்டுமே இருக்கின்றன.

ஒருவரோடு நெருங்கி இருப்பதென்றால், உடல் ரீதியான பகிர்தல்தான் உடனே உங்கள் நினைவுக்கு வரும். ஏனெனில், உங்களைப் பொறுத்த வரை அவருக்கு உங்கள் உடலைத்தான் வழங்க முடியும் என்று கருதுகிறீர்கள். சிலர் உணர்வு ரீதியாக உங்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்கலாம். சிலர் அறிவு ரீதியாக உங்கள் தேடல்களுக்கு ஈடு தரலாம்.

திருமண வாழ்வை பலர் விரும்பி ஏற்றுக்கொண்டு காலம் முழுவதும் மோதல்களிலும், ஒருவரையொருவர் தாக்கிக்கொள்வதிலும் தங்கள் வாழ்வைக் கழிக்கிறார்கள். திருமணத்தில் ஏதோ தவறு உள்ளது என்று பொருள் அல்ல. அவர்கள் மனமுதிர்ச்சி இல்லாமல் இருப்பதுதான் அதற்குக் காரணம்.

உங்கள் உடல், மனம், உணர்வுகள் ஆகியவற்றின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுகிற செயல்முறையில் புனிதம் சேர்த்ததன் விளைவாக திருமணம் என்கிற அமைப்பே உருவானது. மேற்கண்ட தேவைகள் இல்லை என்றால் திருமணத்தை நீங்கள் தவிர்த்துவிடலாம்.



தங்களுக்கு திருமணம் தேவையா... இல்லையா? என்று பலரும் யோசிப்பதே இல்லை. ஆட்டு மந்தைகள் போல நடந்துகொள்கிறார்கள். "மற்றவர்களுக்கு மணமாகிறது. எனவே, நானும் மணம் செய்துகொள்கிறேன்" என்கிறார்கள். மூன்று நாட்களுக்கு மேல் அவர்களால் மணவாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க முடிவதில்லை.

ஒருவருடைய 25–வது திருமண நாள் கொண்டாடப்பட்டது. அன்று அவர் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்துகொண்டு இருந்தது. "திருமண வாழ்க்கையை நினைத்துப் பார்த்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறார்களா?" என்று மனைவி கேட்டார்.

அவர் சொன்னார்: "உன் தந்தை ஒரு நீதிபதி. உன்னைத் திருமணம் செய்துகொள்ளாவிட்டால், ஏதாவது வழக்கில் என்னை கைது செய்து பல ஆண்டுகள் சிறையில் அடைப்பேன் என்றார். அதற்கு நான் துணிந்திருந்தால் இன்று விடுதலை பெற்று இருப்பேன். அதை நினைத்துதான்..." என்றாராம்.

திருமணம் என்பது இரண்டு பேர் வாழ்வதற்கு வழங்கப்படுகிற வாய்ப்பு. முறையாக வாழ்ந்தால், அது மகிழ்ச்சியானதாக அமையும். ஆனால், மனமுதிர்ச்சி இல்லாமல் வாழ்ந்து வாழ்க்கையை சிலர் தோல்விமயம் ஆக்கிக்கொள்கிறார்கள். ஒன்று, முழு முட்டாளாக அல்லது மற்றவரிடம் முழுமையான அன்பில் சரண் அடைபவராக இருக்க வேண்டும். அப்போதுதான் மணவாழ்க்கை ஆனந்தமாக இருக்கும். இந்த இரண்டும் இல்லாமல் சமூக நியதிக்காக சேர்ந்து வாழ்பவர்கள் ஒருவர் வாழ்வை ஒருவர் சீரழித்துக்கொண்டேதான் இருப்பார்கள்."

– தகவல்: சஜோ